


**28. 08. 2026**

தலைப்புச் செய்திகள்

1. நாட்டில் பொருளாதார ரீதியில் பின்தங்கிய மக்களுக்கு ஜன்தன் வங்கி கணக்கு திட்டம் மிகுந்த பயனளிப்பதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தொ◌ிவித்துள்ளார்.

2. சகோதரத்துவத்தை வலியுறுத்தும் ரக்ஷாபந்தன் நாடு முழுவதும் இன்று உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது

3. நேபாள பெருவெள்ளத்தில் சிக்கிய தமிழ்நாட்டை சேர்ந்த 21 தமிழர்கள் உட்பட 84 இந்தியர்கள் இதுவரை மீட்கப் பட்டுள்ளதாக அமைச்சகம் கூறியுள்ளது.

4. சென்னை உள்ளிட்ட 5 மாவட்டங்களில், 914 கோடி மதிப்பீட்டில் 842 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்படும் என்று மாநில அமைச்சர் திரு. ராஜ்குமார் சட்டப் பேரவையில் அறிவித்துள்ளார்.

5. ஆசிய கோப்பை மகளிர் 20-20 கிரிக்கெட் போட்டிகள் துபாயில் இன்று தொடங்குகின்றன.

❖❖❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

நாட்டில் பொருளாதார ரீதியில் பின்தங்கிய மக்களுக்கு ஜன்தன் வங்கி கணக்கு திட்டம் மிகுந்த பயனளிப்பதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தொ◌ிவித்துள்ளார்.

பிரதமரின் ஜன்தன் வங்கி கணக்கு திட்டம் தொடங்கி இன்றுடன் 12 ஆண்டுகள் நிறைவடைவதை ஒட்டி பிரதமர் வெளியிட்டுள்ள செய்தியில், இத்திட்டத்தின் கீழ் இதுவரை 59 கோடி வங்கி கணக்குகளுக்கு மேல் தொடங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

இதில் 56 சதவிகிதம் மகளிர் என்றும்,

ஊரக மற்றும் நடுத்தர நகர்ப்புற பகுதிகளில் 78 சதவிகித வங்கி கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளதாகவும் தொிவித்தார்.

கடந்த 19-ம் தேதி நிலவரப்படி இத்திட்டத்தில் உள்ள மொத்த இருப்பு தொகை 3 லட்சத்து 17 ஆயிரம் கோடியாக அதிகரித்துள்ளது எனவும் பிரதமர் குறிப்பிட்டார்.

இத்திட்டத்தில் 41 கோடியே 29 லட்சம் ரூபே அட்டைகள் விநியோகிக்கப்பட்டு இதன் பயன்பாடு கணிசமாக அதிகரித்துள்ளது.

ஜன்தன் வங்கி கணக்கு – ஆதார் – கைப்பேசி எண் ஆகியவற்றின் இணைப்பின் மூலம் எவ்வித கசிவுகளோ இடைத்தரகர்களின் ஆதிக்கமோ இல்லாமல் மக்கள் நலத்திட்டங்களின் நிதி நேரடியாக வங்கி கணக்குகளில் செலுத்தப்பட்டுள்ளதாக மத்திய நிதியமைச்சகம் கூறியுள்ளது.

வங்கி சேவையை வாடிக்கையாளரின் வீடுகளுக்கே கொண்டு சேர்த்தது ஜன்தன் திட்டம் என்று பாரத ஸ்டேட் வங்கியின் திருச்சி மண்டல துணை மேலாளர் திரு. முருகானந்தம் தொிவித்துள்ளார்.

.. வாய்ஸ் ..

இத்திட்டத்தின் மூலம் அரசின் நலத்திட்ட உதவிகள் வங்கி கணக்கில் நேரடியாக வருவது மகிழ்ச்சி அளிப்பதாக பயனாளி ஒருவர் தொிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

தர்மபுரி மாவட்டத்தில் நான்கு லட்சத்து 7 ஆயிரம் ஜன்தன் வங்கி கணக்குகள் உள்ளதாக மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு. எஸ். தீபன் தொிவித்துள்ளார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖❖

ரக்ஷாபந்தன்

சகோதரத்துவத்தை வலியுறுத்தும் ரக்ஷாபந்தன் நாடுமுழுவதும் இன்று உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது.

குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி.ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு. நரேந்திரமோடி, மத்திய இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் உள்ளிட்டோர் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

சகோதர சகோதரிகளுக்கிடையே அன்பையும் நம்பிக்கையையும் வலுப்படுத்தும் இந்நன்னாளில் அனைவரது வாழ்விலும் மகிழ்ச்சி, வளம், வெற்றியை இவ்விழா கொண்டுவரட்டும் என வாழ்த்தியுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

### நிர்மலா சீதாராமன்

மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் 6 நாள் பயணமாக இன்று அமெரிக்கா செல்கிறார்.

முன்னதாக டொராண்டாவில் கனடா நிதியமைச்சர் உடனான பேச்சுவார்த்தைக்குப்பின் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில், இருதரப்பு வர்த்தகம் முதலீட்டை மேலும் வலுப்படுத்தவது குறித்தும் இதில் ஆலோசிக்கப்பட்டதாக தொ◌ிவிக்கப்பட்டுள்ளது.

இருதரப்பு முதலீட்டு ஒப்பந்தம் குறித்த பேச்சுவார்த்தைகளை விரைவில் தொடங்க இந்தியா தயாராக உள்ளதாக திருமதி. நிர்மலா சீதாராமன் தொ◌ிவித்தார்.

பல்வேறு நிதித்துறை சார்ந்த பிரச்சனைகளில் ஆழமான ஒத்துழைப்பு குறித்தும் இரு அமைச்சர்களும் விவாதித்தனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

### நேபாளம்

நேபாள பெருவெள்ளத்தில் சிக்கிய தமிழர்களை மீட்கும் நடவடிக்கையாக தமிழக அமைச்சர்கள் திரு. ராஜ்மோகன், திரு. ஆதவ் அர்ஜுனா, திரு. வினோத், திரு. தென்னரசு ஆகியோர் தில்லியில் தூதர அதிகாரிகளுடன் ஆலோசனையில் ஈடுபட்டனர்.

தமிழ்நாடு இல்லத்தில் அமைக்கப்பட்டுள்ள உதவிமைய கட்டுப்பாட்டு அறையில் அமைச்சர்கள் ஆய்வு மேற்கொண்டதோடு,

தகவல் சேகரிப்பு மீட்பு நடவடிக்கைகள் குறித்து அலுவலர்களிடம் கேட்டறிந்தனர்.

இதனிடையே ஒன்றுக்கும் மேற்பட்ட குழுவைச் சேர்ந்த 100-க்கும் மேற்பட்டோர் நேபாளம் சென்றிருப்பது தற்போது தொிய வந்துள்ளதாக அமைச்சர் திரு. ராஜ்மோகன் தொிவித்துள்ளார்.

26 பேர் பாதுகாப்பாக இருப்பதாகவும், அவர்களை தொடர்பு கொள்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் கூறினார்.

மத்திய அரசு, நேபாள அரசுடன் பேசி அவர்களுக்கான உதவிகளை செய்வதோடு விரைவில் அவர்களை மீட்டு வருவோம் என்றும் உறுதியளித்தார்.

இச்சம்பவத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 469 ஆக அதிகரித்துள்ள நிலையில் ஆயிரத்து 545 பேர் காணவில்லை என்றும் அதிகாரிகள் தொிவித்துள்ளனர்.

இந்தியர்கள் 290 பேரை தொடர்புகொள்ள முடியவில்லை என்று மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் தொிவித்துள்ளது.

தமிழ்நாட்டை சேர்ந்த 21 தமிழர்கள் உட்பட 84 இந்தியர்கள் இதுவரை மீட்கப்பட்டுள்ளதாக அமைச்சகம் கூறியுள்ளது.

இதனிடையே திபெத் நாட்டில் உள்ள அணை உடைந்ததால் நேபாளத்தில் மீட்புப்பணிகளை நிறுத்திவைத்து அனைவரும் பாதுகாப்பான இடங்களுக்கு செல்ல நேபாள காவல்துறை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖

ராஜ்குமார்

சென்னை, கடலூர், மதுரை, திருவள்ளூர், கன்னியாகுமரி மாவட்டங்களில் 914 கோடி மதிப்பீட்டில் 842 அடுக்குமாடி குடியிருப்புகள் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்படும் என்று வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற அமைச்சர் திரு. ராஜ்குமார் தொிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று தமது துறை மானிய கோரிக்கை அறிவிப்புகளை வெளியிட்டு பேசியஅவர், மனை மேம்பாட்டுத்

திட்டத்தின் கீழ் 564 மனைகள் 45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னை, கிருஷ்ணகிரி, கடலூர், சேலம், ராணிப்பேட்டை, நாமக்கல் மாவட்டங்களில் அமைக்கப்படும் என்றார்.

சென்னை மாநகர் C.I.T. நகரில் 18 கோடி மதிப்பீட்டில் 20 குடியிருப்புகள் வாடகைக்கு விடும் திட்டத்தின் கீழ் கட்டப்படும் என்றார்.

சுயசான்றளிப்பு மூலம் வழங்கப்படும் கட்டடங்களுக்கான பரப்பளவு 5 ஆயிரம் சதுர அடியாக உயர்த்தப்படும்,

சிறிய வணிக கட்டடங்களுக்கு சுய சான்றளிப்பு மூலம் திட்ட அனுமதி வழங்கும் நடைமுறை அறிமுகப்படுத்தப்படும்,

கோயம்பேடு விற்பனை வளாகத்தில் கூடுதலாக ஏழரை கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் கடைகள் கட்டப்படும்,

10 கோடி ரூபாய் செலவில் விற்பனை அங்காடிகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்படும் உள்ளிட்ட அறிவிப்புகளை வெளியிட்டார்.

சென்னை பெரம்பூரில் சாலையோரங்கள் மற்றும் ஆட்சேபகரமான பகுதிகளில் வாழும் ஏழை எளிய வீடற்ற மக்களுக்கு பெரம்பூரில் 111 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 462 அடுக்குமாடி குடியிருப்புகள், கட்டப்படும் என்றார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

ச.பே. - வெங்கட ரமணன்

தமிழ்நாட்டில் அத்தியாவசிய பொருட்களின் விலைவாசி உயர்வை அரசு தீவிரமாக கண்காணித்து வருவதாக மாநில உணவுத்துறை அமைச்சர் திரு. வெங்கடரமணன் தொிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள் கொண்டுவந்த கவன ஈர்ப்பு தீர்மானத்திற்கு பதிலளித்த அமைச்சர், விலையை கட்டுப் படுத்துவதற்கும் மக்களை பாதுகாப்பதற்கும் உரிய நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்று உறுதியளித்தார்.

ஈரான் உள்ளிட்ட நாடுகளில் போர்ச்சூழல் காரணமாக விலைவாசி உயர்ந்துள்ளதாகவும் கூறிய அமைச்சர் சர்க்கரை

அதிகமாக உற்பத்தி செய்யும் மஹாராஷ்டிரா மாநிலத்திலேயே சர்க்கரை விலை உயர்ந்துள்ளதை சுட்டிக்காட்டினார்.

முன்னதாக எதிர்கட்சித்தலைவர் திரு. உதயநிதி ஸ்டாலின் விலைவாசி உயர்வு குறித்த கவன ஈர்ப்பு தீர்மானத்தை கொண்டுவந்து பேசியபோது, கடந்த மாதத்திற்கும் இந்த மாதத்திற்கும் ஏற்பட்டுள்ள அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வை ஆதாரங்களுடன் சுட்டிக்காட்டினார்.

ஆளுங்கட்சி கூட்டணியில் உள்ள கட்சிகளே விலைவாசி உயர்வு குறித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளதாக கூறிய திரு. உதயநிதி விலைவாசியை கட்டுப்படுத்த முதலமைச்சர் சிறப்பு கூட்டத்தை கூட்ட வேண்டுமென்றார்.

அஇஅதிமுக சட்டப்பேரவை குழு தலைவர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி பேசுகையில், அஇஅதிமுக ஆட்சிக்காலத்திலும் விலைவாசி உயர்வு ஏற்பட்டபோது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை சுட்டிக்காட்டினார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

இடைத்தேர்தல்

திருச்சி கிழக்கு உள்ளிட்ட 5 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் அறிவிக்க, விதிக்கப்பட்ட தடையை நீக்க வேண்டுமென தமிழக முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் சார்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் பதில்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் வழக்கு நிலுவையில் உள்ளதால் திருச்சி கிழக்கு, கரூர், விராலிமலை, அம்பாசமுத்திரம், பெருந்துறை ஆகிய ஐந்து தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் அறிவிக்க தடை விதிக்க கோரி தாக்கல் செய்யப்பட்ட பொதுநல வழக்கில், முதலமைச்சர் சார்பில் இந்த பதில்மனு தாக்கல் செய்யப்பட்டது.

இடைத்தேர்தல் அறிவிக்க தடை விதிக்கப்பட்ட ஐந்து தொகுதிகளிலும் பலமுனை போட்டி நடந்துள்ளதால் பொதுநலன் கருதி இடைத்தேர்தல் அறிவிக்க விதிக்கப்பட்ட தடையை நீக்க வேண்டும் என்றும்,

வழக்கை அபராதத்துடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் பதில் மனுவில் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது.

இடைத்தேர்தல் நிறுத்தி வைக்கப்பட்டதால் இந்த தொகுதிகளில் சட்டப்பேரவை உறுப்பினர்கள் இல்லாமல் மக்கள் பாதிப்படைந்துள்ளதாகவும் இம்மனுவில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர் புழல்

சென்னை புழல் சிறையில் முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

கைதிகளின் நிலைமை, அவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் அடிப்படை வசதிகள் உள்ளிட்டவை குறித்து சிறைத்துறை அதிகாரிகளிடம் அவர் கேட்டறிந்தார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

ஸ்டாலின்

தி.மு.கவில் 110 மாவட்ட செயலாளர்களை நியமிப்பதற்கு வசதியாக தொகுதிகளை பிரித்து அக்கட்சித்தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் இன்று அறிவிப்பு வெளியிட்டார்.

இதன்படி 2 தொகுதிகளுக்கு ஒரு மாவட்ட செயலாளர் வீதம் நியமிக்கப்படுவதாக அவர் கூறியுள்ளார்.

ஒருசில மாவட்ட செயலாளர்கள் மட்டும் 3 தொகுதிகளை கவனிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தொ◌ிவித்தார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

இருவரி

தமிழகம் முழுவதும் அனைத்து நியாயவிலைக் கடைகளிலும் கைரேகை பதிவு செய்வதற்கான சிறப்பு முகாம் நாளை நடைபெறுகிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖

நாகை

நாகை வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய மாதா பேராலய ஆண்டுப் பெருவிழா நாளை கொடியேற்றத்துடன் தொடங்குகிறது.

பல்வேறு பகுதிகளிலிருந்து பக்தர்கள் பாதயாத்திரையாக வேளாங்கண்ணி வந்தவண்ணம் உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

ஆசிய கோப்பை மகளிர் 20-20 கிரிக்கெட் போட்டி துபாயில் இன்று தொடங்குகிறது.

வரும் 13-ம் தேதிவரை நடைபெறவுள்ள இப்போட்டியில் இந்தியா உட்பட 8 அணிகள் பங்கேற்கின்றன.

இந்தியா தனது முதல் ஆட்டத்தில் நாளை மறுநாள் தாய்லாந்தை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖❖❖